Mid-Term-I August-2024
10th Std. Social Science Key
Cuddalore District

I. சரியான விடையை தேர்வு செய்க 7 x 1 = 7

1. இ) ஜப்பான்
2. இ) போப்
3. இ) பாங்கர்
4. இ) அயன மண்டல பருவக்காற்று காலநிலை
5. அ) ஒருமுறை
6. அ) வேளாண்மை
7. ஆ) கோல்கொண்டா சுல்தான்

IV. சுருக்கமாக விடையளி (எவையேனும் ஐந்து மட்டும்) 5 x 5 = 25

8. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களை குறிப்பிடுக

இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

9. இந்தோ-சீனாவில் நடைபெற்ற 'வெள்ளை பயங்கரம்' குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

1929 – ன் ராணுவப் புரட்சி, கம்யூனிஸ்ட்களின் தலைமையில் விவசாயிகளின் புரட்சி ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து வெள்ளை பயங்கரவாதம் என்பது அரங்கேறியது. புரட்சியாளர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர்

10. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.

மரிய அந்துவான்

- மேற்கு – பாகிஸ்தான்
- வடமேற்கு – ஆப்கானிஸ்தான்
- வடக்கு – சீனா, நேபாளம், பூடான்
- கிழக்கு – வங்காளதேசம், மியான்மர்
- தெற்கு – இலங்கை

11. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?

தென்மேற்கு பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) பருவமழை வெடிப்பு' எனப்படுகிறது..

12. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?

நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப்பேராணை எனப்படும்.

இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

13. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்க்கான தகுதிகள் யாவை?

- இந்தியக் குடிமகன்
- ஐந்து ஆண்டுகள் உயர் நீதிமன்ற நீதிபதி. (அல்லது) பத்து ஆண்டுகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குரைஞராக செயலாற்றியிருத்தல் வேண்டும்.
- குடியரசுத் தலைவர் பார்வையில் சிறப்பு மிக்க சட்ட வல்லுநராய் இருத்தல் வேண்டும்.

14. நாட்டு வருமானம் – வரையறு.

ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

மொத்த நாட்டு உற்பத்தி (GNP) எனப்படுகிறது.

15. உலகமயமாக்கலின் வகைகள் யாவை?

தொன்மையான, இடைப்பட்ட மற்றும் நவீன ஆகிய மூன்று வகை உலகமயமாக்கல்

விரிவான விடையளி (எவையேனும் ஐந்து மட்டும்) 5x 5 = 25

16. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி

(I) ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிரணி சேர்க்கைகளும் :

* மூவர் உடன்படிக்கை – ஜெர்மனி, ஆஸ்திரியா – ஹங்கேரி, இத்தாலி.

* மூவர் கூட்டு நாடுகள் – இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா.

(II) வன்முறை சார்ந்த தேசியம் :

* ஒரு நாட்டின் மீதான பற்று மற்றொரு நாட்டின் மீது வெறுப்பு தோன்றியது.

* இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி –இல் தோன்றிய வன்முறை சார்ந்த தேசியம்.

(III) ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு :

* ஜெர்மனி பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் ஆக்கிரமிப்பு மனப்பான்மை.

* ஜெர்மனியே உலகத்தின் தலைவன் என்றார். கப்பற்படை விரிவுபடுத்தப்பட்டது.

(IV) பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை :

ilahhighschool YouTube Channel

* 1871 இல் அல்சேஸ், லொரைன் பகுதிகளை பிரான்ஸ் ஜெர்மனியிடம் இழந்தது.

* மொராக்கோ விவகாரத்தில் பிரான்சுக்கு எதிராக ஜெர்மனி தலையிட்டது.

(V) பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு

1908இல் துருக்கியில் இளம் துருக்கியர் புரட்சி நடைபெற்றது.

(VI) பால்கன் போர்கள் :

* முதல் பால்கன் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது.

* இரண்டாவது பால்கன் போரில் பல்கேரியா தோற்கடிக்கப்பட்டது.

(VII) உடனடிக் காரணம் :

* ஆஸ்திரியப் பேரரசரின் வாரிசு பிரான்ஸ் பெர்டினாண்டு படுகொலை.

17. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க

உலகம் இரு அணிகளாகப் பிரிதல்

அமெரிக்கா, ரஷ்யா

அணு ஆயுதப் பரவல்

ஆயுதங்கள் குவிந்து, இராணுவச் செலவுகள் அதிகரிப்பு

பன்னாட்டு முகமைகள்

ஜக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, பன்னாட்டு நிதியம்

காலனி நீக்கச் செயல்பாடு:-

இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கு சுதந்திரம்

18. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.

இமயமலையின் உட்பிரிவுகள் :

1) ட்ரான்ஸ் இமயமலைகள். 2) இமயமலைகள்.
3) பூர்வாஞ்சல் குன்றுகள்.

இமயமலையின் முக்கியத்துவம் :

தென்மேற்கு பருவக் காற்றைத் தடுத்து கனமழையைக் கொடுக்கிறது. இந்திய துணைக் கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது. வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. (சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா) வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது. * மத்திய ஆசியாவில் இருந்து வீசும் கடும் குளிர் காற்றைத் தடுக்கிறது. இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவையாக உள்ளது.

19. வேறுபடுத்துக

1	வானிலை	காலநிலை
	தினமும் தாறும்	மாறாதது(35 வருட பதிவு)
	படிப்பு வானிலையியல்	படிப்பு காலநிலையியல்

2	மேற்கு தொடர்ச்சி மலை	கிழக்கு தொடர்ச்சி மலை
	மேற்கில் உள்ளது	கிழக்கில் உள்ளது
	தொடர்ச்சியானது	தொடர்ச்சியற்றது

காரணம் கூறுக

மழைநிர் சேமிப்பு அவசியம்.

நிலத்தடி நீர்மட்டம் உயர, விவசாயம் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்ய

20. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.

இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.

இது நெகிழாத்தன்மை மற்றும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.

கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.

இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.

சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.

உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

21. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?

அரசியலமைப்பு சட்டப்பிரிவு 78 பிரதம அமைச்சரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

jiahhighschool YouTube Channel

பிரதம அமைச்சர் அமைச்சர்களின் நிலையை அறிந்து அவர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளை ஒதுக்கீடு செய்கிறார்.

தான் தலைமை வகிக்கும், அமைச்சரவைக் கூட்டத்தின் தேதி, நிகழ்ச்சி நிரல் (Agenda) குறித்து முடிவு செய்வார்.

காபினெட் அமைச்சரவை கூட்டம் நடைபெறாத பொழுது பிரதம அமைச்சர் தனது மூத்த சகாக்கள் இருவர் அல்லது மூவரை இயல்பாகக் கலந்தாலோசிக்கலாம்.

பிரதம அமைச்சர் பல்வேறு துறைகளின் பணிகளை மேற்பார்வையிடுகிறார்.

நடுவண் அரசின் விவகாரங்கள் மற்றும் சட்டத்திற்கான முன்மொழிவுகள் போன்ற அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும் குடியரசுத் தலைவருடன் விவாதிக்கிறார்.

பிரதம அமைச்சர் என்பவர் குடியரசுத் தலைவருக்கும், அமைச்சரவைக்கும் இடையே பாலமாக செயல்படுகிறார்.

பிரதம அமைச்சர் நாட்டின் உண்மையான தலைவராவார். அவர் நாட்டின் முக்கிய செய்தித் தொடர்பாளராகவும் செயல்படுகிறார்.

சர்வதேச மாநாடுகளான காமன்வெல்த், அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு, சார்க் நாடுகளின் மாநாடு ஆகியவற்றில் இந்திய நாட்டின் பிரதிநிதியாகப் பிரதமர் பங்கு கொள்கிறார்.

22. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.

மொத்த நாட்டு உற்பத்தி (GNP): அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

GNP = C + I + G + (X–M) +NFIA

மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP): ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்)களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) – தேய்மானம்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP): நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – தேய்மானம்.

தலா வருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI): தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

நாட்டு வருமானத்தை மக்கள் தொகையில் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.

தனிப்பட்ட வருமானம் (PI): நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

செலவிடத் தகுதியான வருமானம் (DI): தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.

23) உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக

உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் தானாக கிடைப்பதில்லை.

வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சம்.

உலகளாவிய போட்டி அதிகரித்து, தொழில்துறையில் அமைதியற்ற சூழல்.

சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.

குழந்தை தொழிலாளர் முறை மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.

மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவுதலுக்கு இது வழிவகுக்கிறது.

உலகமயமாக்கல் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ilahi high school YouTube Channel

24. காலக்கோடு



1905 – வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 – சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது
1916 – தன்னாட்சி இயக்கம் / லக்னோ ஒப்பந்தம்
1917 – சம்பரான் சத்தியாகிரகம்
1918 – கேடா சத்தியாகிரகம்
1919 – ரௌலட் சட்டம் / ஜாலியன்வாலா பாக் படுகொலை
1920 – கிலாபத் இயக்கம் / ஒத்துழையாமை இயக்கம்
1922 – சௌரி சௌரா சம்பவம்
1923 – சுயராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்
1927 – சைமன் குழு நியமனம்
1928 – மோதிலால் நேரு அறிக்கை
1929 – லாகூர் காங்கிரஸ் மாநாடு
1930 – உப்பு சத்தியாகிரகம் / முதல் வட்டமேசை மாநாடு

1900
1910
1920
1930



1910 – தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
1912 – முதல் பால்கன் போர்
1914 – முதலாம் உலகப் போர் தொடக்கம்
1917 – ரஷ்யப் புரட்சி
1918 – முதல் உலகப் போர் முடிவு
1919 – பாரிஸ் அமைதி மாநாடு / வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை
1920 – பன்னாட்டு சங்கம் தோற்றம்
1922 – முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
1927 – வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
1929 – பொருளாதாரப் பெருமந்தம் / லேட்டரன் உடன்படிக்கை

1900
1910
1920
1930

25. உலகப்படம்


ரஷ்யா
ஜெர்மனி
இங்கிலாந்து
இத்தாலி
10 முதல் இடைப் பருவத் தேர்வு

26. இந்திய வரைபடம்


கே2 சிகரம்
10 முதல் இடைப் பருவத் தேர்வு
பாலை மண்
கங்கை ஆறு
சுந்தரவனம்
மேற்கு தொடர்ச்சி மலை
தக்காண பீடபூமி
வடகிழக்கு பருவக்காற்று
காவிரி டெல்டா
FOR SUCCESS
மரிய அந்துவான்
WORK HARD

M.Maria Anthuvan
GHS, Kattukudalore
Cuddalore Dt.
9443282980

ilahi high school YouTube Channel